1970 டிசம்பர் 2]

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 2, இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move the following amendment :—

'In clause 2 of the Bill, in new section 17-B, *omit the words* "only and" and add the words "and for the purposes permitted under this Act" at the end.'

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) as amended be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்பு

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர்வழங்கு-வடிகால் வாரிய மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர் வழங்கு—வடிகால் வாரிய மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர்வழங்கல்—வடிகால் வாரிய மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 47/1970).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர்வழங்கல்—வடிகால் வாரிய மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண். 47/1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் முன் மொழிகிறேன்.

* 23—11—1970 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.